Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR**
**Case No. CC.NO. 29/2022**

DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS (PW) No. 7 Page. No.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | திரு. கார்த்திகேயன் | **தொழில்** | சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் |
| **த/க பெயர்** | திரு. சுந்தரம் | **கிராமம்/ஊர்** | கந்திலி |
| **வயது** | 60 | **மாவட்டம்** | திருப்பத்தூர் |

| | |
|---|---|
| எதிரிகள் ஆஜர் | 1-4 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 13th day of July 2026

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**முதல் விசாரணை.-**

1. நான் கந்திலி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி தற்போது ஓய்வு பெற்று விட்டேன். கடந்த 15.01.2020 அன்று நான் கந்திலி காவல் நிலைய அலுவலில் இருந்தபோது, திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த தங்கவேல் த/பெ. பெருமாள் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் திரும்பி நிலைய குற்ற எண். 17/2020 இதச பிரிவுகள் 294(பி), 341,324,506(2) ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(அந்த முதல் தகவல் அறிக்கை என்னால் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் 16.01.2020 அன்று காலை 07.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சசிக்குமார் மற்றும் ஞானவேல் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(அந்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே என்னால் அ.சா.ஆ.9,10 ஆக குறியீடுசெய்யப்படுகிறது).**

2. பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் அன்றைய தினமே காலை 07.30 மணிக்கு சம்பவ இடத்தில் இருந்து சுமார் 90 செ.மீ. நீளமும் 11 செ.மீ. சுற்றளவும் கொண்ட மரத்தடி ஒன்றை கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றிக்கொண்டேன். **(அந்த கைப்பற்றுதல் மகசர்**

**அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் 1– 5 வரையிலான பட்டியல் சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர், வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தினை படிவம் – 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **(படிவம் 91 அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.).** பின்னர் 1 மற்றும் 2 எதிரிகளை காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். 3 மற்றும் 4 எதிரிகள் நீதிமன்றத்தில் பிணை பெற்றுக்கொண்டதால்கைது செய்யப்படவில்லை. பின்னர், வழக்கு கோப்பினை மேல்விசாரணைக்காக காவல் உதவி ஆய்வாளர் திரு.வெங்கடேசன் அவர்களின் வசம் ஒப்படைத்தேன்.

3. பின்னர், வழக்கினை மேல் விசாணைக்கு எடுத்து கொண்டு காவல் உதவி ஆய்வாளர் திரு. வெங்கடேசன், பின்னர் வழக்கு சம்பவத்தில் காயமடைந்த அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோருக்கு சிகிச்சை அளித்த மருத்துவரை அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றுள்ளார். பின்னர் அவர் தனது புலன்விசாரணையை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 341,326,506(2) ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். வழக்கு சம்மந்தமாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. மருத்துவமனையில் இருந்து தகவல் எப்போது பெறப்பட்டது என்ற விவரம் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டவில்லை என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் அ.சா.1னிடம் புகார் வாக்குமூலம் பெறும் போது, எதிரிகளிடமும் புகார் வாக்குமூலம் பெற்றேன் என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கு நான் 16.01.2020 அன்று சென்றேன். அப்போது ஞானவேல் மற்றும் சசிக்குமார் இருந்தார்கள். மேற்படி நபர்கள் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகள் இல்லை என்றால் சரிதான். அவர்கள் சம்பவத்தை பார்க்காததால் அவர்கள் கூறியதன் அடிப்படையில் சம்பவம் நடந்த இடத்தை நான் தெரிந்து கொண்டதாக கூறுவது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. குமரவேல் என்பவர் சம்பவம் நடந்தபோது அங்கு இருந்துள்ளார். குமரவேல் என்பவரை சம்பவயிடத்தில் வைத்து விசாரித்தேன். இவ்வழக்கின் சாட்சிகள் என்றாலும், தனிநபர்களை சாட்சியாக நான் சேர்க்கவில்லை என்றாலும் சரிதான்.

2. இவ்வழக்கில் நான் மற்றும் புலன் விசாரணை அதிகாரி, சம்பவ இடம் செல்லாமல் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, அனைத்து ஆவணங்களையும் காவல் நிலையத்திலேயே வைத்து தயாரித்து எதிரிகள் மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல்

**செய்துள்ளோம் என்றாலும், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல.**

**<u>மறுவிசாரணை –</u>** இல்லை

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

Signature of Witness

Judicial Magistrate No.II
Tirupathur.